விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 048 வள்ளுவர் ஆண்டு 2056 தை 23 புதன்கிழமை (05.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## சுதந்திர தினம் தமிழினத்தின் கரிநாள்!
## தமிழர் தாயகத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்




(யாழ்ப்பாணம்) இலங்கையின் சுதந்திர தினம் தமிழினத்தின் கரிநாள் என பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கு தமிழர் தாய கத்தில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரத்தினை வென்றெடுக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்
### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

சுதந்திரத்தினை முழுமையாக வென் றெடுக்க அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினத்தில் தமிழில் தேசிய கீதம்

(கொழும்பு)

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினமான நேற்று தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப் பட்டது.

தேசியக் கொடி ஏற்றப்படும்போது, சிங்கள மொழி மூலம் தேசிய கீதம் இசைக் 15

## யாழ்.சிறையிலிருந்து 17 கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 17 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெண் ஒருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் 15

## யாழ்.பல்கலைக்கழகத்தில் ஏற்றப்பட்ட கறுப்புக்கொடி



(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினத்தினை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணப் பல் கலைக்கழக மாணவர்கள் போராட்டத் தில் நேற்று ஈடுபட்டனர்.

இதன்போது, பிரதான கொடிக் கம்பத்தில் பறந்த 15

## இலங்கையின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வு



## வாகனப் பவனி இன்றி எளிமையாக வந்த ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டின் 77ஆவது சுதந்திர தினத்தில் வாக னப் பவனி இன்றி ஜனாதி பதி அநுர குமார திஸா நாயக்க மிகவும் எளிமை யான முறையில் பங்குபற்றினார். 02

## நல்லூர்ப் பகுதியில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோவில் வீதிப் பகுதியில் இளைஞன் ஒரு வரின் சடலம் நேற்று மீட்கப் பட்டுள்ளது.

இதில் அதே இடத் 15

## பிரித்தானியாவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் முன் ஈழத் தமிழர்கள் போராட்டம்




02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உள்ளூராட்சித் தேர்தல்

# தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவோம் எனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் வாக்கெடுப்பு தினத்தன்று அரச சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் உட்பட சுகாதார சேவையாளர்கள் என அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் பலர் வாக்களிக்காமல் தமது சேவைகளில் ஈடுபடுகிறார்கள்.

வாக்களிப்பு தினத்தன்று அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் துறையின் சேவையாளர்களுக்கு தபால்மூல வாக்களிப்புக்கு அனுமதியளிக்குமாறு தேர்தல் முறைமை தொடர்பிலான பாராளுமன்ற தெரிவுக்குழு மற்றும் குழுக்களிடம் பலமுறை யோசனைகளை முன்வைத்துள்ளோம். இருப்பினும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் ஏதும் இதுவரையில் செயற்படுத்தப்படவில்லை.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் உத்தியோகபூர்வ பெறுபேற்றை அறிவிக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் இந்த யோசனைகளை முன்வைத்தோம். ஆகவே இந்த யோசனைகளை நிறைவேற்றுவதற்கு தேர்தல்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும். அதற்கான அழுத்தத்தை தொடர்ந்து பிரயோகிப்போம்.

உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு அமைவாகவே செயற்பட முடியும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## யாழ். பல்கலைக்கழக

# சட்ட நிறைவேற்று அதிகாரி கலாநிதி ரமணா இராஜினாமா

### நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்ட நிறைவேற்று அதிகாரியாகச் செயற்பட்டு வந்த விஞ்ஞானபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ.வெங்கடரமணா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

விரிவுரையாளர் ஒருவரின் முறைகேடான பிரசாரங்கள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட நிறைவேற்று அதிகாரி பதவியை கலாநிதி ஆ.வெங்கடரமணா இராஜினாமாச் செய்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அண்மையில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் பீடாதிபதி பதவியை இராஜினாமா செய்ததும், பின்னர் பேரவை எடுத்த முடிவுகளை அடுத்து, அவர் மீளவும் கலைப்பீடாதிபதிப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டதும் தெரிந்ததே. (ம-7)

# பொறுப்புக் கூறலைத் தவிர்த்து போராட்டங்களை முடக்கும் அரசு

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொறுப்புக்கூறலைத் தவிர்க்கும் அநுர அரசாங்கம் போராட்டங்களையும் முடக்க முயற்சி செய்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

செல்லப்பிராணிகளுக்கு அதிக உணவு வழங்கப்பட்டால், மக்கள் அதிகளவில் தேங்காய்களை உபயோகித்தால், துறைமுகங்களில் கொள்கலன்கள் தேங்கினால் நாம் என்ன செய்வது என்று அரசாங்கம் கேள்வியெழுப்புகிறது.

அவ்வாறெனில் இந்த நாட்டுக்கு அரசாங்கம் என்ற ஒன்று எதற்கு? அரசாங்கம் பொறுப்பேற்று 4 மாதங்கள் நிறைவடைவதற்குள் 6 அரச நிறுவனத்தலைவர்கள் பதவி விலகிவிட்டனர்.

மறுபுறம் சுட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ளது. இந்நிலையில் விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் இடம்பெறவுள்ளது.

அதனை மையமாகக் கொண்டு அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் கோபத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால் எவ்வித பரிசோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்ட அதிக அபாயமிக்க கொள்கலன்கள் தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து எந்த அறிவிப்பும் இல்லை.

விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடும் போது அவர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப் படுகிறது.

கடந்த அரசாங்கங்களுக்கு எதிராகச் சகல தொழிற்சங்கங்களையும் வீதிக்கிறக்கிப் போராடிய இந்த அரசாங்கம் தற்போது போராட் டங்களை முடக்க முற்படுகின்றது என்றார். (ம-7)


# மரண அறிவித்தல்



பிறப்பு 16 - 08 - 1944

இறப்பு 04 - 02 - 2025

## கனகசபை இரவிச்சந்திரன்

(சாயி கிருஷ்ணா பல்பொருள் வாணிப உரிமையாளர்)

நெல்லியடி குருந்தட்டியைப் பிறப்பிடமாகவும் காளையந்தோட்டம் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இரவிச்சந்திரன் அவர்கள் நேற்று 04.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - ராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் அகல்யா, காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கமலரூபன் மற்றும் சுரம்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 06.02.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளையந்தோட்டம்,
வதிரிச்சந்தி.

(C-2197)

தகவல் :
குடும்பத்தினர்
072 77 48 800


### அனைவரும்...

கொழும்பு - சுதந்திர சதுக்கத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நாட்டின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டைப் பாதுகாத்து வளமானதாக மாற்றுவதற்கான பொறுப்பு உணவு உற்பத்தி செய்யும் விவசாயி முதல் நாட்டை காக்கும் முப்படையினர் வரை அனைவருக்கும் உள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் சகல தொழிற்துறையினரும் இதில் பங்குதாரர்களாகவுள்ளனர்.

நாட்டைப் பொருளாதார ரீதியில் சுதந்திரமானதாக மாற்றுவதற்கு இந்த நாட்டின் சகல பிரஜைகளும் ஒன்றிணைய வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

### வாகனப்...

இலங்கையின் 77வது தேசிய சுதந்திர தின பிரதான வைபவம் நேற்று சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

இந்நிலையில், நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி அநுர பாதுகாப்பு வாகனங்கள், அம்புலன்ஸ்கள் அல்லது பிற துணை வாகனங்கள் எதுவும் இன்றி வருகை தந்திருந்தார்.

அத்துடன் பிரதமர் மற்றும் விருந்தினர்களும் வந்தபோது, ஒரே ஒரு பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் மட்டுமே முன்னால் வந்ததை அவதானிக்க முடிந்தது. (ம-7)

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் வயோதிபப் பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் - குளப்பிட்டி வீதிப் பகுதியைச் சேர்ந்த 80 வயதுடைய ஓய்வு பெற்ற ஆசிரியரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7)

### இலங்கை...

பிரித்தானியா லண்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக பிரித்தானியத் தமிழர்கள் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இலங்கையின் சுதந்திரநாள் ஈழத் தமிழ்மக்களுக்கு கரிநாள் என்ற கோசத்துடன் நேற்றுப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரித்தானியா மன்னரின் பக்கிங்ஹாம் அரண்மனை நோக்கி பேரணியாகச் சென்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் இல்லாத நாட்டில் எதற்கு சுதந்திர தினம்?



யாழ்.பல்கலையில்



நல்லூரில்


கிளிநொச்சியில்



(க-6-8-33-100-316)

# அரிசி மாபியாக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

(கொழும்பு)

**நாட்டில் நிலவி வரும் அரிசித் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு தீர்வு காண்பது சுலபமான காரியம் அல்ல என அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன் போது கருத்துத் தெரிவிக்கையில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரிசி வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தொடங்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபை நெல் கொள் முதல் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் அரிசி மாபியாக்களைக் கட்டுப்படுத்த முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். (6-8)

# நல்லிணக்கத்தை வலியுறுத்தி வவுனியாவில் வாகனப் பேரணி



(குருமங்காடு)

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு நல்லிணக்கத்தினை வலியுறுத்தி வவுனியாவில் மூவின மக்களினையும் இணைத்து வாகனப் பேரணி ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

குறித்த பேரணியானது வன்னி மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா, புதிய பேருந்து நிலையம் முன்பாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திரவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப்பேரணியானது, கண்டி வீதி ஊடாக சென்று பஜார் வீதியினை அடைந்து அங்கிருந்து மணிக்கூட்டு கோபுரம் வரை சென்று அங்கிருந்து கண்டி வீதி ஊடாக சென்று வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக முடிவடைந்திருந்தது.

குறித்த பேரணியில் கலந்து கொண்ட வாகனங்கள் அனைத்திலும் தேசியக்கொடி கட்டப்பட்டு, மூவின மக்களின் கலாசாரங்களை பிரதிபலிக்கும் நடன நிகழ்வும் இடம்பெற்றது. (6-8-250)

# 13 வேட்பாளர்கள் மீது வழக்கு

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைக் கையளிக்காத 13 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல் ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதில் 3 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் 10 சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் 1064 பேர் வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைக் கையளிக்கவில்லை எனவும் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார். (க-6-8)

# முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை

## பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய



(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகளை வழங்குவதற்காக வரும் தரப்பினரின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி, ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவும் முடியும் எனப் பதில் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்கு வரும் தரப்பினரின் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை எனவும் முறைப்பாடுகள் நிராகரிக்கப்படுவதாகவும் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்படும் முறைப்பாடுகளைப் பதிவு செய்து விசாரணை செய்வது பொலிஸ் அதிகாரிகளின் கடமையும் பொறுப்புமாகும்.

இதன்படி, இனிமேல் பொலிஸ் நிலையங்களில் கிடைக்கப்பெறும் எந்தவொரு முறைப்பாட்டையும் நிராகரிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள்-2025

## தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும்



**கிரகநிலை:** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி - சுக ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு (வ) - சப்தம ஸ்தானத்தில் செவ்வாய்(வ) - தொழில் ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து புதன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சூரியன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று இராசியில் இருந்து புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் தெய்வம் சம்பந்தமட்ட காரியங்களில் ஈடுபாடு கொண்டவர்கள். இந்த மாதம் எதிர் பார்த்த பணவரத்து தாமதமாக கிடைக்கலாம். வாக்கு வன்மை ஏற்படும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பலவகை யோகம் உண்டாகும். புண்ணிய ஸ்தலங்களை தரிசிக்கும் எண்ணம் ஏற்படும். சிலர் யாத்திரை செல்வார்கள். அடுத்தவர்கள் உதவி கிடைக்கும்.

தொழில் வியாபாரம் நன்றாக நடக்கும். எதிர்பார்த்த ஓடர்கள் வந்து சேரும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்திசாதூரியத்துடன் நடந்து கொண்டு நன்மை அடைவார்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கக் கூடும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். புதிய வீடு கட்டுவது, பழைய வீட்டை புதுப்பிப்பது போன்ற பணிகளைத் தொடங்க முற்படுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் பெருமை சேரும். அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கி கொடுத்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். உறவினர்களுடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பெண்கள் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆன்மிகப் பயணம் செல்வதில் விருப்பம் உண்டாகும்.

கலைத்துறையினருக்கு கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சினை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் இலாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். அரசியல் துறையினருக்கு வாக்கு வன்மையால் எதையும் சாதித்துக் கொள்வீர்கள்.

புதிய பதவி, புதிய பொறுப்புகள் ஏற்படலாம். மேலிடம் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்புக்கு ஆளாவீர்கள். மாணவர்களுக்கு புத்திசாதுரியத்துடன் நடந்து கொண்டு மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். கல்வியில் மேன்மை உண்டாகும்.




**மூலம்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களுக்காக அலைய வேண்டி இருக்கும். பணவரத்து எதிர்பார்த்தபடி வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்ற வாய்ப்புகள் வரும். புதிய வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 - புத - கும்<br>11.02 - குரு - வநி<br>12.02 - சூரி - கும்<br>21.02 - செ - வநி<br>26.02 - புத - மீன | | |
| சூரி புதன் | | | |
| | | | கேது |

**பூராடம்:** இந்த மாதம் குடும்பத்தில் எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்களால் இழுபறியாக இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் காணப்படும். பிள்ளைகளுடன் அனுசரித்துச் செல்வது கருத்து வேற்றுமை வராமல் இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**உத்திராடம்1 ஆம் பாதம்:** இந்த மாதம் சாமர்த்தியமாக செயற்பட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து புகழ் பெறுவீர்கள். பயணங்கள் செல்ல நேரிடும். உத்தியோகத்தில் முன்னேற்றம் காணப்படும். கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும்.

**பரிகாரம்:** குரு பகவானை முல்லை மலரால் அர்ச்சனை செய்து வணங்க செல்வம் சேரும். செல்வாக்கு உயரும். மன மகிழ்ச்சி உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 11, 12.

**அதிஷ்ட தினங்கள்:** 4, 5.

## எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்



**கிரகநிலை-** இராசியில் சூரியன், புதன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி - தைரிய வீரிய ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - பஞ்சம ஸ்தானத்தில் குரு (வ) - ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய்(வ) - பாக்கிய ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று இராசியில் இருந்து புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று இராசியில் இருந்து சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து புதன் இராசிக்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பினை நம்புபவர்கள். இந்த மாதம் பணத்தேவை அதிகரிக்கும். இராசிநாதன் சனி சஞ்சாரத்தால் இடமாற்றம் ஏற்படலாம். ஆடை, அணிகலன் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். வாகன யோகம் கிடைக்கும். எதில் கையெழுத்து போடுவதாயிருந்தாலும் கவனம் தேவை. எழுத்து வகையில் எதிலும் சிக்காமல் கவனமாக இருப்பது நல்லது.

தனஸ்தானத்தை இராசிநாதன் அலங்கரிக்கிறார். கூட்டுத் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் கூட்டாளிகளுடன் சுமூகமான முறையில் அனுசரித்துச் செல்வது நல்லது.

வீண் அலைச்சல் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு திடீர் நெருக்கடிகள் ஏற்படலாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பயனற்ற பயணங்கள் உண்டாகலாம். பணி நிமித்தமாக வெளியூரில் தங்க வேண்டி வரலாம்.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் கவனமாகப் பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் கல்வி தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. உறவினர்கள், நண்பர்களுக்கு உதவி செய்வதற்கு முன் ஆலோசனை செய்து கொள்வது நல்லது.

பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும். வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தோழிகளுடன் சுமுகமாக பேசிப் பழகுவது நல்லது.

கலைத்துறையினருக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை செய்து முடிப்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. பணவரத்து திருப்திகரமாக இருக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அவர்கள் மூலம் முன்னேற்றம் காண உதவி கிடைக்கும். அரசியல்துறையினருக்கு எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

காரிய வெற்றி கிடைக்கும். பணம் சம்பாதிக்கும் திறமை அதிகப்படும். தடைபட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வேகம் காணப்படும். சக மாணவர்களிடம் சுமுகமாக அனுசரித்து போவது நல்லது.




**உத்திராடம்2,3,4 ஆம்பாதங்கள்:** இந்த மாதம் எதிலும் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது. காரியத் தடை தாமதம் ஏற்படலாம். மனோ தைரியம் கூடும். எதிலும் மந்தமான சூழ்நிலை உருவாகும். ஆனாலும் கடும் முயற்சிக்குப் பின் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடந்து முடியும். மன குழப்பம் நீங்கும்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 - புத - கும்<br>11.02 - குரு - வநி<br>12.02 - சூரி - கும்<br>21.02 - செ - வநி<br>26.02 - புத - மீன | | |
| சூரி புதன் | | | |
| | | | கேது |

**திருவோணம்:** இந்த மாதம் வராமல் நின்ற பணம் வந்து சேரும். பயணங்கள் சாதகமான பலனை தரும். தொழில், வியாபாரம் முன்னேற்ற பாதையில் சென்றாலும் மனத் திருப்தியளிக்காத நிலை காணப்படும். வியாபாரம் தொடர்பான காரியங்களில் முழுக்கவனம் செலுத்துவீர்கள்.

**அவிட்டம் 1,2ஆம் பாதங்கள்:** இந்த மாதம் புதிய நபர்களின் அறிமுகம் நன்மை தரலாம். அவர்களிடம் பொறுப்புகள் கொடுப்பதில் கூடுதல் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்களின் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும்.

**பரிகாரம்:** விநாயகப் பெருமானை தீபம் ஏற்றி வழிபட காரிய வெற்றி உண்டாகும். குடும்பக் கவலை தீரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, செவ்வாய், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 13, 14.

**அதிஷ்ட தினங்கள்:** 6, 7, 8.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் முகக் கவசங்களை அணியுமாறு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் எதிர்வரும் சில நாட்களுக்கு காற்றின் தரமானது ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று காற்றின் தரக் குறியீடு 85 முதல் 128 இற்கு இடைப்பட்ட அளவில் உள்ளது என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் வவுனியா, நுவரெலியா, புத்தளம், முல்லைத்தீவு, பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய நகரங்களில் காற்றின் தரக் குறியீடு மிதமான மட்டத்தில் காணப்படுகின்றது.

இதற்கமைய தற்போதைய சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு, முடிந்த வரை அனைவரும் முகக் கவசங்களை அணியுமாறும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (6-8)



பருத்தித்துறை முனையிலிருந்து தெய்வேந்திர முனை நோக்கிய வடக்கு முதல் தெற்கு வரை சக வாழ்வு சைக்கிள் ஓட்ட நிகழ்வு நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்: மகாலிங்கம்)

# ஏ9 வீதியில் மோப்ப நாயுடன் விசேட சோதனை நடவடிக்கை

(குருமன்காடு)

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கில் மோப்ப நாயுடன் விசேட சோதனை நடவடிக்கையினை விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் இணைந்து நேற்று முன்னெடுத்தனர்.

தெற்கில் இருந்து வடக்கிற்கு செல்லும் ஏ9 பிரதான வீதியில் தாண்டிக்குளம் பகுதியில் மோட்டர் சைக்கிள்கள், பேரூந்துகள், பாரவூர்திகள் மற்றும் சொகுசு வாகனங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (6-8-250)

# பொன்விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஊரெழு கணேச வித்தியாசாலையில் பரிபூரணம் தம்பிராசாவால் அமைக்கப்பட்ட மண்டபத்தின் பொன் விழா நிகழ்வு இன்று பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(789)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
Western Union WU MoneyGram. Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# மாவட்டச் செயலகங்களில் சுதந்திரதின நிகழ்வுகள்
















(6-8-33-250-285-299-316)

# இராசிபலன்

05.02.2025
தை 23 புதன்கிழமை
அட்டமி பின்னிரவு 3.31 மணிவரை

பரணி முன்னிரவு 11.24 மணிவரை
சுபநேரம் 5.05-6.35 மணிவரை
இராகுகாலம் 12.35-2.05 மணிவரை

சந்திராஷ்டமம் - அத்தம், சித்திரை

வளவன்

**மேஷம்**
திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், வேலைச்சுமை கூடும்.

**ரிஷபம்**
பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது குறை கேட்கும் நிலையும் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மிதுனம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பணவரவு எதிர்பார்த்தபடியே கிடைக்கும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கடகம்**
கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சமார்த்தியமாகப் பேசி சாதனை படைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள்.

**கன்னி**
ஒரு வகை வந்த வரவுகள் இன்னொரு வகையில் விரயம் ஏற்படலாம், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்**
பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**
செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்.

**தனுசு**
புத்தி சாதுரியமாக நடந்து பொருள் வரவைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மகரம்**
வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்**
தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்**
பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

ஒரு குழந்தைக்கு தாய் இருக்கும் இடம் தான் சொர்க்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தனின் உலகப் பெருமஞ்சமும் பால் குடப்பவனியும்



(யாழ்ப்பாணம்)

அருள்மிகு இணுவில் கந்த சுவாமி கோவில் உலகப் பெரு மஞ்சத் திருவிழாவும் பால்குடப் பவனியும் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப் பூசத் திருநாளில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 6 மணிக்கு இணுவில் மருதனார் மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் பால்குடப் பவனி ஆரம்பமாகி இணுவில் கந்தசுவாமியார், ஆறுமுகப் பெருமான் சமேத வள்ளி தெய்வானைக்கு பக்தர்கள் பாலாபிஷேகம் செய்து தமது நேர்த்திக் கடனை நிவர்த்தி செய்ய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அன்று மாலை வரலாற்றுச் சிறப்புமிக்க உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானையுடன் திருவீதி உலா இடம்பெறும் எனவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (க-6-8)

# அரச இயந்திரங்களின் காணி சுவீகரிப்பு; வீதிகளிலா மக்கள் வாழ்வது-ரவிகரன் எம்.பி

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர், வனஇலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கள் மக்களுக்குரிய காணிகளை தொடர்ந்தும் அத்துமீறி அபகரிப்புச் செய்வதால், மக்கள் குடியிருப்பதற்கே காணிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு மக்கள் காணிகள் சுவீகரிக்கப் படுவது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச இயந்திரங்கள் தொடர்ந்தும் மக்களின் காணிகளை ஆக்கிரமிப்பு செய்தால் மக்கள் வீதிகளிலா குடியிருப்பது எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஐயங்கன்குளத்தில் 21 குடும்பங்களுக்கும், பழைய முறிகண்டியில் 4 குடும்பங்களுக்கும், புத்துவெட்டுவான் பகுதியில் 12 குடும்பங்களுக்கும், கல்விளான் பகுதியில் 15 குடும்பங்களுக்கும், தென்னியன் குளம் பகுதியில் 5 குடும்பங்களுக்கும், கோட்டைகட்டியகுளம் பகுதியில் 5 குடும்பங்களுக்கும், அம்பலப்பெருமாள் குளம் பகுதியில் 5 குடும்பங்களுக்கும், அமதிபுரம் பகுதியில் 7 குடும்பங்களுக்கும், துணுக்காய் பகுதியில் 8 குடும்பங்களுக்குமாக மொத்தம் 255 குடும்பங்கள் துணுக்காய் பிரதேச செயலர்பிரிவிலே காணியற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகள் படையினராலும், வன இலாகா, வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச இயந்திரங்களாலும் மக்களினுடைய காணிகள் அதிகளவில் அபகரிக்கப்பட்டிருப்பதற்கான புள்ளிவிபரங்கள் எம்மிடமுள்ளன.

இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள மக்கள் காணிகள் மீட்கப்பட்டு, மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அத்துடன் வன இலாகாவினர் மக்களிடமோ அல்லது கிராமஅலுவலர், பிரதேச செயலாளர், மாவட்ட செயலர் யாருடனும் தொடர்பு கொள்ளாமலும், அறிவித்தல் வழுங்கப்படாமலும் மக்களின் காணிகளில் எல்லைக்கற்கள் நடும் செயற் பாட்டை உடன் நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-6-8)

# நெல்லுக்கான விலையை நிர்ணயம் செய்யுங்கள்

## செல்வம் எம்.பி கோரிக்கை

(மன்னார்)

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள விவசாயிகளை நாங்கள் தூக்கி விடுவதாக இருந்தால் அவர்களின் நெல்லுக்கான உரிய விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயத்திற்காக வங்கிகளில் கடன்களை பெற்றும் நகைகளை அடமானம் வைத்தும் பெற்ற பணத்தில் விவசாயத்தை மேற்கொண்டுள்ளனர்.

எனவே அவர்களை நாம் தூக்கி நிறுத்த வேண்டும். புதிய அரசாங்கம் நெல்லின் விலையை நிர்ணயம் செய்து அவர்களை கைதூக்கி விட வேண்டும் என அவர் தெரிவித்தார். (க-6-8-285)

# கடல் வளத்தை பாதுகாக்க பொறிமுறை உருவாக்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் கடல் வளத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தமது அரசாங்கத்தின் முதன்மை நோக்கங்களுள் ஒன்றாகும். அதற்குரிய பொறிமுறையும் உருவாக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி பகுதியில் வெண்புரவி புனித அந்தோனியார் கடற்றொழில் கிராமிய அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

தமது பகுதியில் கடல் அரிப்பை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மீனவர்கள் இளைப்பாறுவதற்கு உரிய வசதிகள் இல்லை, உரிய வகையில் நங்கூரமிடும் ஏற்பாடு உட்பட கடற்றொழிலை உரிய வகையில் முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்து தருமாறும் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை, ரோலர் படகு பயன்பாடு உள்ளிட்டவற்றால் தமக்கு ஏற்படும் வாழ்வாதார பாதிப்புகள் பற்றியும் அமைச்சரிடம் முறையிட்டனர்.

மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனும் பங்கேற்று இருந்தார். (6-8)

# 3 பவுண் சங்கிலி, தொலைபேசிகள் திருட்டு

(சாவகச்சேரி)

கைதடியில் அமைந்துள்ள அரச அலுவலகம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பணியாளர்களின் தங்க நகை மற்றும் தொலைபேசிகள் திருட்டுப் போயிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பணியாளர்களின் ஓய்வு அறையில் வைக்கப்பட்டிருந்த மூன்று பவுண் சங்கிலி, இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் ஆகியனவே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 750 | 600 | 450 | 750-900 | 700 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1100 | 1100 | 1000 | 850-1050 | 900 |
| தக்காளி | 300 | 300 | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 260 | 220 | 200 | 200 |
| கோவா | 350 | 320 | 200 | 300 | 400 |
| கரட் | 450 | 700 | 700 | 500 | 700 |
| பூசணி | 120 | 120 | 150 | 130 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 | 180 | 300 |
| வாழைக்காய் | 250 | 150 | 150 | 130-160 | 250 |
| சின்ன வெங்காயம் | 550 | 400 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 250 | 140-160 | 200 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 500-600 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 250 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 180 | 150 | 250 |
| பயற்றங்காய் | 600 | 700 | 500 | 700-300 | 600 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 300 | 450 |
| பீற்றூட் | 550 | 300 | 400 | 400 | 500 |
| கறிமிளகாய் | 1100 | 1100 | 600 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1400 | 1500 | 2400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 700 | 400 | 300 | 500 | 600 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 120 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 | 100-150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 270 | 180 | 150-220 | 200-250 |
| இராசவள்ளி | 550 | 600 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 400 | 170 | 250 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| [illegible] | 100 | 150 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# 39 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா

## 19.03.2025, 20.03.2025, 21.03.2025 மற்றும் 22.03.2025

உயர்பட்டங்கள், பட்டங்கள், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றை தகுதியளிப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா **19.03.2025, 20.03.2025, 21.03.2025 மற்றும் 22.03.2025** ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்களை **06.02.2025** தொடக்கம் **20.02.2025** ஆம் திகதி **காலை 9.00 மணி** வரை தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். மேலதிக விபரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளம் www.jfn.ac.lk இனைப் பார்வையிடவும்.

1. **கலாநிதி**
2. **முதுமெய்யியல்மாணி**
3. **கிறிஸ்தவகற்கைகளில் முதுமாணி**
4. **பிராந்திய திட்டமிடலில் முதுமாணி**
5. **சைவசித்தாந்தத்தில் முதுமாணி**
6. **தமிழில் முதுமாணி**
7. **முது வியாபார நிர்வாகமாணி**
8. **கல்வியியலில் முதுமாணி**
9. **பொதுநிர்வாகத்தில் முதுமாணி**
10. **கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - முழுநேரம்**
11. **கல்வியியலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - பகுதிநேரம்**
12. **தமிழில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - முழுநேரம்**
13. **கலைமாணி சிறப்பு**
14. **கலைமாணி (தேர்ந்தமை)**
15. **மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணி**
16. **சட்டமாணி**
17. **விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி**
18. **வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி**
19. **வியாபார நிர்வாகமாணி சிறப்பு**
20. **வணிகமாணி சிறப்பு**
21. **உயிர்முறைமைகள் தொழில்நுட்பமாணி சிறப்பு**
22. **பொறியியல் தொழில்நுட்பமாணி சிறப்பு**
23. **பொறியியல் சிறப்பு விஞ்ஞானமாணி**
24. **சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி**
25. **தாதியியல் சிறப்பு விஞ்ஞானமாணி**
26. **மருந்தகவியல் சிறப்புமாணி**
27. **மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான சிறப்பு விஞ்ஞானமாணி**
28. **சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி**
29. **நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி**
30. **சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி**
31. **வியாபார முகாமைத்துவமாணி**
32. **செயற்றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி**
33. **செயற்றிட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி**
34. **கணக்கியலும் நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி**
35. **சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி**
36. **வியாபாரப் பொருளியலில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி**
37. **மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணி**
38. **பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணி (தேர்ந்தமை)**
39. **கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி**
40. **சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (தேர்ந்தமை)**
41. **சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி**
42. **தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி**
43. **தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி**
44. **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமாணி (தேர்ந்தமை)**
45. **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமாணி சிறப்பு**
46. **கலைமாணி (வெளிவாரி)**
47. **வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி)**
48. **வணிகமாணி சிறப்பு (வெளிவாரி)**
49. **வணிகமாணி (வெளிவாரி)**

**அறிவுறுத்தல்கள்:**

1. **வேண்டுகோள் படிவங்களைச் சமர்ப்பித்தல்**
   அனைத்து விண்ணப்பதாரிகளும் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தின் ஊடாக கூகிள் (google) படிவத்தினை **20.02.2025 காலை 9.00 மணிக்கு** முன்னர் நிகழ்நிலையாக நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட செயல்முறையில் வேண்டுகோள் படிவத்தினை தரவேற்றம் செய்யும் போது **2MB** இற்கு மேற்படாது **'Jpeg'** அல்லது **'jpg'** அல்லது **'pdf'** முறைவடிவில் இருத்தல் வேண்டும்.

வேண்டுகோள் படிவத்தின் வன்பிரதியை (பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டவாறாக) **பதிவுத்தபால்** மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு **25.02.2025** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் **"39 ஆவது பட்டமளிப்பு விழா, (மாணவர் பதிவிலக்கம்:........)"** எனத் தங்களின் பதிவிலக்கத்தையும் குறிப்பிட்டு எழுதி அனுப்பவும்.

**அஞ்சல் முகவரி :**

**அனைத்து உள்வாரி விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்**

1. **சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ அனுமதிகள் கிளை,**
   **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
   **இராமநாதன் வீதி,**
   **திருநெல்வேலி,**
   **யாழ்ப்பாணம்.**

**அனைத்து வெளிவாரி விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்**

2. **சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
   **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
   **திருநெல்வேலி,**
   **யாழ்ப்பாணம்.**

**2. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | | |
|---|---|---|---|
| கட்டணம் | பட்டதாரிகள் | பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் | வெளிவாரிப் பட்டதாரிகள் |
| பட்டமளிப்பு விழாக்கட்டணம் | 4300 | 4700 | 4300 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | 1300 | 1700 | 1300 |
| பட்டச்சான்றிதழ்க் கட்டணம் | 1800 | 2100 | 1800 |
| புகைப்படக் கட்டணம் | 1600 | 1600 | 1600 |
| மொத்தக் கட்டணம் | **9000** | **10100** | **9000** |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் (குறிப்பிலக்கம்) | | | |
| நேரில் சமுகமளிப்பவர் | 970000052100308 | 970000082100310 | 890002460001794 |
| சமுமளிக்காதவர் | 970000052100340 | 970000082100351 | 890002460003311 |

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ பொருத்தமான முறையில் மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். **மேற் குறிப்பிட்டபடி பொருத்தமான குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைக் குறித்துக் கொள்க.**
**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3.பட்டதாரி மேலங்கி**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்கள் அவர்களுக்கான பட்டதாரி மேலங்கிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் ஆவணக்காப்பகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பட்டதாரி மேலங்கி விநியோகம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**4.பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப் படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது. மேலதிக தகவல்களுக்கு உள்வாரிப்பட்டதாரிகள் 021 222 6714 அல்லது admissions@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் மூலமும், வெளிவாரிப் பட்டதாரிகள் 021 222 3612 அல்லது mdlcrd@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொள்ளவும்.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய காலம்: 06.02.2025 இலிருந்து 20.02.2025 காலை 9.00 மணிவரை.**

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

**பதிவாளர்**

(C-2192)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அயர்லாந்தில் கார் விபத்து இந்தியர்கள் இருவர் பலி




(டப்ளின்)

அயர்லாந்தில் நடந்த கார் விபத்தில் செருகுரி சுரேஷ் சவுத்ரி மற்றும் பார்கவ் சித்தூரி ஆகிய இரண்டு இந்திய மாணவர்கள் உயிரிழந்தனர்.

அயர்லாந்தில் கார்லோ நகருக்கு அருகில் உள்ள கிரேகுவெனாஸ்பிடோகே என்ற இடத்தில் கறுப்பு நிற ஆடி ஏ6 கார் மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த கார் விபத்தில் குறித்த இரண்டு இந்திய மாணவர்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக அயர்லாந்து பொலிஸார் தெரிவித்தனர். இது குறித்து அயர்லாந்து தலைநகர் டப்ளினில் உள்ள இந்திய தூதரகம் சமூகவலை தளத்தில் இரங்கல் செய்தியை வெளியிட்டது. அயர்லாந்து பிரதமர் மைக்கேல் மார்ட்டின், கார்க்கில் ஒரு கூட்டத்தில் உரையாற்றும் போது, "விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்த செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தேன்" என்றார்.

இவர்கள் கார்லோ நகரில் ஒன்றாக வீடு வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வந்துள்ளனர். பாதிக்கப்பட்ட நான்கு பேரும் கார்லோவில் உள்ள தென் கிழக்கு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் ஆவர். (6-8)

## அமெரிக்க ஜனாதிபதியை சந்திக்கவுள்ள பிரதமர் மோடி



(டில்லி)

எதிர்வரும் 12 ஆம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 13 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்து பல முக்கியமான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதைத் தொடர்ந்து அவருடன் இந்தியப் பிரதமர் மோடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதுகுறித்து டொனால்ட் ட்ரம்ப் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது 'அமெரிக்கா, இந்தியா இடையே நல்லுறவு நீடிக்கிறது.

பெப்ரவரி மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி வெள்ளை மாளி கைக்கு வருவார்" எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் எதிர்வரும் 10ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் பங்கேற்கவுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அங்கிருந்து வரும் 12 ஆம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து 13ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த வுள்ளார் எனவும் அன்றிரவு ட்ரம்ப் சார்பில் மோடிக்கு சிறப்பு இரவு விருந்து அளிக்கப்பட



வுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து 14 ஆம் திகதி அமெரிக்க தொழிலதிபர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினரை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப் பேசவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவுக்கு பிரதமர் மோடி அழைக்கப்படாத நிலையில், நடைபெறவுள்ள குறித்த சந்திப்பானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## நண்பனுக்கு சிங்கக்குட்டியை பரிசளித்த யூடியூப்பருக்கு நேர்ந்த கதி?



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானை சேர்ந்த "யூ-டியூபர்" ரஜப்பட் என்பவருக்கு திருமணம் நடைபெற்றது.

திருமணத்தில் பங்கேற்ற அவரது நண்பரும் பிரபல யூ-டியூபருமான ஓமர் டோலா என்பவர் நண்பருக்கு வித்தியாசமாக பரிசளிக்க முடிவு செய்து ஒரு சிங்கக் குட்டியை திருமண பரிசாக வழங்கினார்.

இதுகுறித்த வீடியோக்கள் இணையத்தில் வைரலான நிலையில் இது தொடர்பில் பலரும் விமர்சனங்களைப் பதிவிட்டனர்.

இதையடுத்து வன அலுவலர்கள் வழக்குப்பதிவு செய்து சிங்கக்குட்டியை மீட்டு உயிரியல் பூங்காவில் ஒப்படைத்தனர். மேலும் இதுதொடர்பாக நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்பட்டது.

இதன்போது நீதிபதி யூ-டியூபர் ரஜப்பட் உயிரியல் பூங்காவில் சிங்கக் குட்டியை பராமரிக்க நிதியுதவி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

மேலும் ஒவ்வொரு மாதமும் 5 நிமிடங்கள் மக்களுக்கு தேவையான ஒரு விடயத்தை எடுத்துரைக்க வேண்டும் என்று வித்தியாசமான தண்டனையை அளித்தார். (6-8)

## ட்ரம்பின் மிரட்டலுக்கு அடிபணிந்தது பனாமா

(பனாமா)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தொடர் மிரட்டல்களுக்கு, பனாமா நாடு அடிபணிந்து சீனாவுடனான ஒப்பந்தத்தை முடித்துக் கொள்வதாக உறுதி அளித்துள்ளது.

மத்திய அமெரிக்க நாடான பனாமாவில் அமைந்துள்ளது பனாமா கால்வாய். கரீபியன் கடல் மற்றும் பசுபிக் பெருங்கடலை இணைக்கும் வகையில், 82 கி.மீ., தூரத்துக்கு அமைந்துள்ளது இந்தக் கால்வாய்.

உலகின் கடல்சார் வணிகத்தில், 5 சதவீதமும், அமெரிக்காவின் வர்த்தகத்தில், 50 சதவீதமும், இந்த கால்வாய் வழியாகவே நடக்கின்றன. உலகின் முக்கிய கடல்சார் வணிகத்துக்கான இணைப்பாக இந்த கால்வாய் உள்ளது.

கடந்த, 1977 இல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இந்த கால்வாயை நிர்வகிக்கும் உரிமையை பனாமாவுக்கு அமெரிக்கா வழங்கியது. அது இரு தரப்பும் பயன்படுத்துவதாக இரு[illegible]வேண்டும்.

உள்நாட்டு போர் அல்லது வெளிநாட்டு சக்திகளின் ஆதிக்கம் ஏற்பட்டால், பனாமா கால்வாயை அமெரிக்கா மீண்டும் எடுத்துக் கொள்ளும் என்பதே அந்த ஒப்பந்தம்.

இந்த சூழ்நிலையில், அமெரிக்காவின் வெளியுறவு அமைச்சர் மார்க்கோ ரூபியோ, தன் முதல் வெளிநாட்டு பயணமாக, பனாமாவுக்கு சென்று அந்த நாட்டின் ஜனாதிபதி ஜோஸ் ரூயல் முலினோவை அவர் சந்தித்துப் பேசியுள்ளார்.

அப்போது, ஜனாதிபதி ட்ரம்பின் நிலைப்பாட்டை அவர் விளக்கினார். சீனாவுடனான, பெருவழிப் பாதை திட்டத்தின் ஒப்பந்தத்தை கைவிடாவிட்டால், பனாமா மீது அமெரிக்கா நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று ரூபியோ கூறினார்.

இந்நிலையில், கடந்த, 2017 இல் சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்கப் போவதில்லை என்று, பனாமா ஜனாதிபதி ஜோஸ் ரூயல் முலினோ உறுதியளித்தார். (6-8)

## இர...
## நா...



(வோ...

அமெ... ந்து 20... பட்ட இ... ரக இரா... மூலம் ... அனுப்பி... ரிக்க அ... டர்ஸ் ... திற்கு ...

அமெ... ணங்க... விரோத...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு



# சீனா-அமெரிக்காவுக்கிடையில் தொடங்கியது வர்த்தகப் போர்

(பீஜிங்)

**சீனப் பொருட்கள் மீதான அமெரிக்க வரிகளுக்கு விரைவான பதிலடியாக, சீன ஜனாதிபதி ஜிஜின்பிங் நேற்று அமெரிக்க இறக்குமதிகள் மீதான வரிகளை அதிகரித்துள்ளார்.**



இதன் மூலம், உலகின் முதல் இரண்டு பொருளாதாரங்களுக்கு இடையே வர்த்தகப் போரை இரு நாடுகளும் மீண்டும் புதுப்பித்தது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கூடுதல் 10% வரி அமெரிக்காவிற்குள் அனைத்து சீன இறக்குமதிகள் மீதும் நேற்று அதிகாலை அமுலுக்கு வந்தது.

இது அமுலுக்கு வந்த சில நிமிடங்களில் சீனாவின் நிதி அமைச்சகம், அமெரிக்க நிலக்கரி, திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு ஆகியவற்றிற்கு 15% வரி மற்றும் மசகு எண்ணெய், விவசாய உபகரணங்கள் மற்றும் மேலும் சில பொருட்களுக்கு 10% வரி விதிக்கப்படும் என்று கூறியது.

அமெரிக்க ஏற்றுமதிக்கான புதிய கட்டணங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடங்கும் என்றும் சீனாவின் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், அமெரிக்காவின் கூகுள் நிறுவனத்தின் ஏகபோகத்திற்கு எதிரான விசாரணையைத் தொடங்குவதாகவும் சீனா கூறியுள்ளது.

இதனிடையே, தேசிய பாதுகாப்பு நலன்களைப் பாதுகாப்பதற்காக டங்ஸ்டன், டெல்லூரியம், ருத்தேனியம் மற்றும் மாலிப்டினம் ஆகிய கனிமப் பொருட்களின் மீதும் ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதிப்பதாக சீனாவின் வர்த்தக அமைச்சகமும் அதன் சுங்க நிர்வாகமும் தனித்தனியாக தெரிவித்தன.

தூய்மையான ஆற்றல் மாற்றத்திற்கு முக்கியமான இத்தகைய அரிய கனிமங்களின் உலகளாவிய விநியோகத்தின் பெரும் பகுதியை சீனா கட்டுப்படுத்துகிறது.

ட்ரம்ப் நேற்று முன்தினம் மெக்சிக்கோ மற்றும் கனடா மீதான தனது அச்சுறுத்தலான 25% வரிகளை கடைசி நிமிடத்தில் நிறுத்தி வைத்தார்.

இரு அண்டை நாடுகளுடனான எல்லை மற்றும் குற்ற அமுலாக்கத்திற்கான சலுகைகளுக்கு ஈடாக 30 நாள் இடைநிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டார்.

ஆனால் சீனாவிற்கு அத்தகைய வரி நிவாரணம் எதனையும் அவர் அறிவிக்கவில்லை.

மேலும், இந்த வாரத்தின் பிற்பகுதி வரை ட்ரம்ப் சீன ஜனாதிபதி ஜிஜின்பிங்குடன் பேச மாட்டார் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். (6-8)

# இராணுவ விமானம் மூலம் இந்தியர்களை நாடு கடத்திய அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இருந்து 200 இற்கும் மேற்பட்ட இந்தியர்களை சி-17 ரக இராணுவ விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பியுள்ளதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஆவணங்கள் இன்றி சட்ட விரோதமாக குடி பெயர்ந்த லட்சக்கணக்கானவர்களை சொந்த நாடுகளுக்கு கடத்தும் நடவடிக்கையை அமெரிக்க அரசு மேற்கொண்டு வருகின்றது.

இதுகுறித்து டில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி செய்தியாளர்களுடன் பேசுகையில்,

"அமெரிக்க அரசு தனது எல்லையை பாதுகாக்கும் நடவடிக்கையில் தீவிரமாக உள்ளது. குடியேற்றச் சட்டங்களை தீவிரமாக அமுல்படுத்தி, சட்ட விரோதமாக குடியேறியவர்களை வெளியேற்றி வருகின்றது" எனத் தெரிவித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த நடவடிக்கையால் அமெரிக்காவில் உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் சட்டவிரோத குடியேறிகளாகி உள்ளனர். இதில் இந்தியர்களின் எண்ணிக்கை 18,000 இற்கும் அதிகமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களை திரும்ப அனுப்பும் முடிவை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகமும் ஏற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# முதியோர் காப்பகத்தில் தீ மூவர் பரிதாபமாக உயிரிழப்பு



(பாரிஸ்)

முதியோர் காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் தீயில் கருகிய நிலையில் 3 முதியவர்கள் உயிரிழந்ததுடன் 9 பேர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள ஒரு அடுக்குமாடி கட்டடத்தில் முதியோர் காப்பகம் செயற்படுகிறது. அங்கு 75 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந் நிலையில் இந்த காப்பகத்தில் உள்ள சலவை அறையில் திடீரென தீப்பிடித்து மற்ற பகுதிகளுக்கும் தீ வேகமாக பரவியது. இதனால் அங்கிருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியேறினர்.

இதனையடுத்து அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தண்ணீரைப் பீய்ச்சியடித்து சில மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ அணைக்கப்பட்டது.

ஆனால் அதற்குள் தீயில் கருகி 3 முதியவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 9 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபிராந்திய முயற்சியாண்மைகளை வலுப்படுத்த டேவிட் பீரிஸ் குழுமம் அறிமுகப்படுத்தியுள்ள 'தளிர்'

விளம்பர விபரணம்

தளிர் THALIR

www.dpg.lk/thalir

இலங்கையின் வட பிராந்தியத்தில் முயற்சியாண்மையை ஊக்குவித்து பொருளாதார மேம்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டமே 'தளிர்' ஆகும். புதுமை நிறைந்த, விரிவுபடுத்தக் கூடிய மற்றும் நிலைத்திருக்கக் கூடிய வணிக முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம், வாகனத்துறை (Automotive), சரக்குப் போக்குவரத்து (Logistics), தகவல் தொழில் நுட்பம் (IT), சுற்றுலா (Tourism), விவசாயம் (Agriculture) மற்றும் ஏற்றுமதி (Exports) ஆகிய துறைகளில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வாகனத் தயாரிப்பு மற்றும் சேவைகள் நிதிச் சேவைகள் , சரக்குப்போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகள், மோட்டார் பந்தயம் , பொழுதுபோக்கு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல், ரியல் எஸ்டேட், கப்பல் போக்குவரவு, கரையோரச் சேவைகள் மற்றும் சூரிய சக்தி போன்ற துறைகளில் கடந்த மூன்று தசாப்தத்திற்கு மேல் 35 கம்பனிகளைக் கொண்டு இயங்கும் டேவிட் பீரிஸ் குழுமம் இந்த 'தளிர்' திட்டத்தை அறிமுகப்படுத்தி, நடைமுறைப்படுத்தியுள்ளது. முயற்சியாண்மைகளின் முன்னேற்றம் மற்றும் பிராந்தியத்தின் நீண்டகால வளர்ச்சி என்பன இத்திட்டத்தின் பிரதான நோக்கங்களாக அமைந்துள்ளன.

தளிர் என்ற வார்த்தைக்கு உண்மையான அர்த்தத்தை வழங்கும் வகையில் புதிய முயற்சியாண்மைகளை வளரச் செய்வதில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் அர்ப்பணிப்பு இத்திட்டத்தின் ஊடாக அடிக்கோடிட்டுக் காட்டப்படுகின்றது.

இத்திட்டத்தில் இணைந்துகொள்ள விரும்பும் முயற்சியாண்மைகளிடமிருந்து விண்ணப்பங்களை டேவிட் பீரிஸ் குழுமம் எதிர்பார்க்கின்றது. ஆர்வமுள்ள முயற்சியாளர்கள் வட பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன், நடைமுறைப்படுத்தப்படக் கூடிய மற்றும் விரிவாக்கப்படக்கூடிய எண்ணக்கருக்களை விவரமாக, செயற்படுத்தப்படக் கூடிய வணிகத் திட்டங்களாக முன்வைக்க வேண்டும். இவ்வாறு முன்வைக்கப்படும் திட்டங்கள் சமூகத்தில் தாக்கம் செலுத்தக் கூடியவையாகவும், வளர்ச்சிக்கான தெளிவான பாதையை வெளிப்படுத்தக் கூடியவையாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களில் மூன்று ஆரம்ப வணிகங்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரையான மானியம் வழங்கப்படும். அத்துடன், தெரிவுசெய்யப்பட்ட திட்டங்களுக்கு 10 மில்லியன் ரூபாய் வரை, பங்கு அடிப்படையிலான ஆதரவு கொடுக்கப்படும். நிதி ரீதியான நன்மைகளுக்கு அப்பால் வணிகம், சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் திறன்களை மேம்படுத்தல் குறித்த பயிற்சிகளும் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக தொழில்துறையின் நிபுணர்கள் மற்றும் முன்னணி வணிகர்களிடமிருந்து வழிகாட்டுதல்களும், தொழில்துறை நிபுணர்களுடனான தொடர்புகளும் ஏற்படும்.

இதன் ஊடாக தொழில்முயற்சியாளர்கள் எதிர்காலத்தில் தமது பயணத்தை வெற்றிகரமாகத் தொடர முடியும். வடபிராந்தியத்தின் மேம்பாட்டில் அக்கறை காண்பித்துவரும் டேவிட் பீரிஸ் குழுமம், தொழில்முனைவோரை ஊக்குவித்து எதிர்கால வணிகத்தலைவர்களை உருவாக்கும் நோக்கில் ஆரம்பித்துள்ள தளிர் திட்டத்திற்கு நீங்களும் இன்றே விண்ணப்பித்து வாழ்க்கையில் முன்னேறுவதுடன் பிராந்தியத்தின் முன்னேற்றத்திலும் பங்காளர்களாகுங்கள். நீங்கள் விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 2025 பெப்ரவரி 10ஆம் திகதியாகும்.

தளிர் திட்டம் குறித்த மேலதிக தகவல்களை https://www.dpg.lk/thalir என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும். அத்துடன், thalir@dpmco.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக தளிர் திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

# பாவனைக்கு உதவாத 1,623 மெற்றிக்தொன் உணவுப்பொருட்கள்



(கொழும்பு)

உணவுத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வெயாங்கொடை களஞ்சியசாலைகளில் உள்ள 1,623 மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் மனித பாவனைக்கு ஒவ்வாதவை எனச் சுகாதாரத் திணைக்களம் சான்றளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்கள உணவு ஆணையாளர் உபுல் சாந்த டி அல்விஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த உணவுப் பொருட்கள் உலக உணவு வேலைத் திட்டத்தினால் வழங்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி அந்தப் பொருட்கள் தொடர்பில் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் உலக உணவு வேலைத்திட்டம் ஆகியவற்றால் வழங்கப்படும் ஆலோசனைக் கமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு ஆணையாளர் உபுல் சாந்த டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

# இன்று ஒரு தகவல் 315



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அகத்தூய்மை

எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். அதுதான் நல்லது என்றார் ஒருவர். நான் அப்படித்தான் சேர் இருக்கின்றேன். தினம் இரண்டு வேளை சவர்க்காரம் போட்டுத்தான் குளிக்கின்றேன் என்றார் இன்னொருவர்.

உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது சேர். மனதையும் சுத்தம் செய்ய என்ன சவர்க்காரம் போட வேண்டும் என்று கேட்டார் இவர். ஆன்மிக சவர்க்காரம் அதற்கு போடலாம் என்றார் அவர்.

ஆன்மாவை மேம்படுத்தும் ஒரு முயற்சி தான் ஆன்மிகம். அந்த முயற்சியை எப்படி செய்வது? மனதுக்குள்ளே இருக்கின்ற வேண்டாத விருந்தாளிகளையெல்லாம் வெளியே தள்ளவேண்டும்? அப்படிப்பட்ட வேண்டாத விருந்தாளிகளிலே முக்கியமான ஒருவர் பொறாமை. இவர் நமது மனதுக்குள்ளே இருக்கிறவரைக்கும் நாம் நிம்மதியாக இருக்க முடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தார்கள். இரண்டு பேரும் ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் நல்லபடியாகத்தான் பழகிக்கொண்டு இருந்தார்கள். ஆனாலும் என்னவென்று தெரியவில்லை கொஞ்ச நாளில் அந்த இரண்டு பேரில் ஒருவர் மனதுக்குள்ளே பொறமை என்ற விருந்தாளி வந்து உட்கார ஆரம்பித்தார். அந்த சீடனும் அதற்கு இடம் கொடுத்தார்.

குருவிடம் தான் நல்ல பெயர் வாங்க வேண்டும். தன் நண்பன் கெட்ட பெயர் வாங்க வேண்டும் என்று அவனுக்கு ஆசை உண்டாகிற்று. என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒருநாள் விடியற்காலையிலே எழுந்து நேராக குருவிடம் சென்று அவர் முன்னாலே நின்றான். குருவே! என்னைப் பாருங்கள் நான் எவ்வளவு விரைவாக எழுந்திருக்கின்றேன். குளித்து முடித்துவிட்டு உங்களை வணங்குவதற்காக வந்து நிற்கிறேன் ஆனால் அவன் இன்னமும் கண் முழிக்கவில்லை. இன்னும் தூங்கிக்கொண்டே இருக்கிறான் என்றார் குருநாதர் நிமிர்ந்து பார்த்தார். அப்படியா? அப்படி என்றால் நீயும் கூட அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருக்குமே என்றார் மிகவும் பொறுமையாக. என்ன இது நாம் எவ்வளவு தீவிரமான ஒரு விடயத்தை சொல்கிறேன். அதற்கு நம் குருநாதர் மிகவும் பொறுமையாக இப்படி சொல்கிறாரே என்று நினைத்தார். ஆச்சரியமாக அவரைப் பார்த்தார். குருநாதர் சொன்னார் அடுத்தவனைப் பற்றி குறை சொல்வதற்கு இங்கே வந்திருக்க மாட்டாய் இல்லையா அதனாலே அப்படி சொன்னேன் என்றார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அர்த்தம் புரிந்தது உடனே பொறாமையை மனதிலிருந்து தூக்கியெறிந்தான். மனது சுத்தமாகியது. மனதுக்குள்ளேயிருந்து விரட்ட வேண்டிய இன்னொரு விருந்தாளி கோபம். சினம் தன்னையே கொன்றுவிடும் என்றார் வள்ளுவர். கோபத்துக்கு மனதிலே இடமே கொடுக்காத சில பெரியவர்களும் உண்டு. குருநாதர் என்று ஒருவர் இருந்தார். அவர் ஒரு சமயம் கோதாவரி நதியிலே போய் குளித்துவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தார். வரும் வழியிலே ஒரு மரத்தின் மேலே உட்கார்ந்திருந்த ஒருவர் அவர் மேலே துப்பிவிட்டான். இவர் உடனே திரும்பி போய் மறுபடியும் குளித்துவிட்டு வருகிறான். அப்போதும் துப்புகிறார். அவர் கோபப்படவில்லை பேசாமல் மறுபடியும் குளித்துவிட்டு வருகிறார். இப்படி பல தடவை நடந்து கொண்டே இருந்தது. ஒரு கட்டத்திலே அந்த ஆள் தோற்றுப்போய் அவர் காலிலே வந்து விழுகிறார். ஆச்சரியப்பட்டு கேட்கிறார்.

அது எப்படி நீங்கள் கோபப்படாமல் இருந்தீர்கள்? அது எப்படி என்றான். அதற்கு அந்த பெரியவர் சொல்கிறார். நான் கோபப்பட்டிருந்தால் என் மனது அசுத்தமாக இருக்கும். அசுத்தமானால் குளித்து சுத்தப்படுத்தலாம். மனதை அப்படி சுத்தப்படுத்த முடியாது என்றார். மனதை அசுத்தப்படுத்தாமல் பார்க்க வேண்டியது நமது கடமை. மனதை அசுத்தப்படுத்தும் இன்னொரு விடயம் சுயநலம். ஒரு சுயநலவாதி ஆற்றிலே விழுந்து விட்டார். சுழலில் சிக்கி விட்டார். இன்னொரு சுயநலவாதி கரையிலே இருந்து இதைப் பார்த்தார். ஒரு கயிற்றைத் தூக்கிப் போட்டு அதைப் பிடிக்கச் சொன்னார் கரையிலே இழுத்துக் காப்பாற்றினார். அவர் கரையிலே ஏறியவுடனே இவரைப் பார்த்து என்னைக் காப்பாற்றியதற்காக உங்களுக்கு 50 காசு கொடுக்கலாம் என்று பார்க்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபாய் தான் இருக்கிறது என்றார். உடனே காப்பாற்றியவர் இவரைப் பார்த்து அப்படியென்றால் நீங்கள் இன்னொரு தடவை தண்ணீரிலே விழுந்துவிடுங்கள். நான் காப்பாற்றுகிறேன். ஒரு ரூபாயை கொடுத்துவிடலாம் என்றார். இப்படிப்பட்டவர்களெல்லாம் எத்தனை தடவை தண்ணீரிலே விழுந்தாலும் மனது சுத்தமாகப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய கண்டுபிடிப்புகளைப் பதிவு செய்யும் தேசிய புதுமை அறிக்கை-2024 அறிக்கையில் EDUS Tutor ஒன்லைன் கல்வி நிறுவனம் இடம்பிடித்துள்ளது.

மேற்குறித்த அறிக்கையில் 106 முக்கிய கண்டுபிடிப்புகள் இடம்பெற்றுள்ள நிலையில் வடக்கில் தெரிவு செய்யப்பட்ட ஒரே கல்வி நிறுவனம் EDUS Tutor ஆகும்.

கடந்த மாதம் BMICH அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் EDUCH Tutor நிறுவன தலைமை நிர்வாகி வெ.சுஜீவனிடம் அவ் அறிக்கை வழங்கப்பட்டது.

# நெல் அறுவடை விழா

(லண்டன்)

உலகளவில் புகைபிடிக்காதவர்களி டையே நுரை யீரல் புற்றுநோய் விகிதம் அதிகரித்து வருவதாக ஒரு புதிய ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள லான்செட் சுவாச மருத்துவ இதழ் நடத்திய ஆய்வில், புகைப்பிடிக்காதவர்களிடையே அடினோ கார்சினோமா எனப்படும் ஒரு வகை நுரையீரல் புற்றுநோய் அதிக மாகக் காணப்படுகிறது என்பது தெரிய வந்துள்ளது.

அந்தப் புற்றுநோய் நிலையில் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 53 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த நோய் பெண்கள் மற்றும் ஆசிய மக்களிடையே அதிகமாகக் காணப் படுவதாகவும் வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (6-8)

# கதிரறுத்த நெல்லும் கதிரவனின்றி காப்பெற்றில் தவம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நெற்செய்கை எமது வாழ்வாதாரத்திற்கான பயிர்ச்செய்கை. எமது அன்றாட உணவின் முக்கிய பாகமாக நெல் இருக்கின்ற காரணத்தினால் எமது வாழ்வியலுடன் இரண்டறக் கலந்துமிருக்கின்றது. காலங்காலமாக நெற்செய்கை செய்யப்படுகின்ற இடங்களில் நெற்செய்கையாளர்களுக்கு நெல்லை அறுவடை செய்து, காயவைத்து, பொதியாக்கி அதனை விற்பனை செய்வதென்பது மிகவும் இடர்ப்பாடானதாக மாறிவிட்டது. காலநிலை மாறிவிட்டது என்பதற்கு இங்கே மாசியில் பெய்யும் மழை முன்னுதாரணமாகும். அறுவடை செய்வதற்காக இணைந்த அறுவடைக் கருவியும் காத்திருக்கின்றது. மழை எதிர்பாராத மாதிரி எந்தவித முன்னறிவித்தலுமின்றி கொட்டித் தீர்த்திருக்கின்றது.

நாவற்குழி, பூநகரி, பரந்தன் காப்பெற் வீதியின் ஒருபக்கம் முழுவதுமாக நனைந்த நெல் காயவிடப்பட்டிருக்கின்றது. பாதையில் போகும் வாகனங்கள் நின்று நிதானித்து ஒரு பக்கமாக ஒருக்களித்து செல்லும் காட்சியை தினமும் பார்க்கலாம். காலநிலை எதிர்வுகூறல்கள் அனைத்து விவசாயப் பெருமக்களையும் இன்னமும் சென்றடையவில்லை. டிஜிற்றல் தொழில்நுட்பம் மூலமாகவோ அலைபேசி தொழில்நுட்ப மூலமாகவோ அனைத்து விவசாயப் பெருமக்களையும் இணைத்ததான தகவல் பரிமாறல்கள் பேச்சளவிலேயே இன்னமும் இருக்கின்றது.

அனைவருக்கும் ஒருமித்த செய்தியாக எதிர்வுகூறல்கள் துல்லியமான கணிப்பீடுகள் மூலமாக அனைத்து மக்களுக்கும் சென்றடைய வேண்டும். இங்கிருந்து பிறதேசத்து கணனிகளை நெறிப்படுத்தும் எம்மவர்களுக்கு அனைத்து விவசாய பெருமக்களையும் தொலைபேசி தொழில்நுட்பத்துடன் இணைக்கும் வழிமுறை நடந்துகொண்டேயிருக்கின்றது. நடைபெற்று முடியும் நாளை அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

என்ன இப்படியான பிரச்சினைகளுக்கு இன்னுமா தீர்வு கிட்டவில்லை என விசனப்படுபவர்களும் இருக்கின்றனர். உற்பத்தியாளர்களுக்கு விவசாய நாட்டில் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்காமல் விவசாய வளர்ச்சியில் எவ்வாறு தன்னிறைவு காணப் போகின்றோம். முன்னைய காலங்கள் போல தற்போது இல்லை காலநிலை மாற்றம் பாரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. வட பகுதியில் குளங்களிலிருந்து நீர்ப்பாசனம் பெறும் நிலங்களைத் தவிர பெரும் போகத்தில் மழைவீழ்ச்சியை நம்பியே நெற்சாகுபடி தங்கியிருக்கின்றது.

பொருளாதார சீர்குலைவு குடும்பங்களுக்குள் இன்னும் சமூகத்தினுள்ளான புரிந்துணர்வில் விரிசல்கள் ஏற்படுத்தி நாளாந்தம் அந்த இடைவெளி விரிவடைந்தே செல்கின்றது. உற்பத்தியாளனுக்கு உள்ளக பிரச்சினைகளுடன் காலநிலை மாற்றம் போன்ற புறகாரணிகள் அதனுடனிணைந்த பீடை நோய் என்பனவற்றின் தாக்கம் அனைத்தும் சேர்ந்து பெரிதளவிலான உற்பத்தி பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுகின்றன. இவற்றையும் தாண்டி விளைவித்ததை தகுந்த நேரத்தில் அறுவடை செய்து அதிலிருந்து பெறப்படும் விளைச்சலை விற்று காசாக்குவதற்குள் பெரும்பாடாகி விடுகின்றது. ஆதாயம் முழுவதும் அறுவடை காலத்தில் அழிவுக்குட்படும் நிலைமையிருப்பதனால் விவசாய பெருமக்களுக்கு விவசாய உற்பத்தியில் நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டு விட்டது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



உற்பத்தி செய்த பொருட்களை களஞ்சியப்படுத்தும் வசதிகள் பெரிதாக இங்கு இல்லை. நனைந்த நெல்லை காயவும் வைக்க முடியாமல் காயவைப்பதற்கான நெற்களங்கள் இல்லாத காரணத்தால் பூநகரி பரந்தன் வீதியில் காப்பெற் தரையில் நனைந்த நெல்லை பரவிவிட்டு வருணபகவானின் கருணையை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

மழைமேகம் எங்கும் பரவி வருணபகவானின் கதிர்களைக் கூட தடுத்து நிற்கும் அவலத்தை என்னவென்பது. சந்தைப்படுத்தல் மிகவும் சவாலான விடயமாக மாறியிருக்கின்றது. விளைவித்தது தரமானதாக இருந்தால் மட்டுமே அதற்கான அதிகரித்த விலை. நெல்லுக்கான விலைநிர்ணயம் குறிக்கப்படவில்லை என்னும் அங்கலாய்ப்பு நெற்செய்கையாளர்களை அதிருப்தி அடைய வைத்திருக்கின்றது. இல்லையெனில் அறவிலையில் கேட்டதை கொடுத்து மிச்சம் மீதி எதுவுமில்லாததாக கையும் கணக்கும் சரிவரும் நிலையில் இருக்கின்றனர். மாற்றம் ஏதும் ஏற்படாதா என்ற ஏக்கத்தைத் தவிர விவசாய செய்கையிலீடுபடுபவர்களுக்கு மாற்று வழி ஏதுமில்லை.

விவசாய செய்கையிலீடுபடுபவர்களுக்கான மானியம் அதிகரிக்கப்படல் வேண்டும். விவசாய செய்கையிலீடுபடுபவர்களை ஒருங்கிணைத்த தகவல் தொழில்நுட்பம் விருத்தியடைய வேண்டும். பயிர்ச்செய்கைக்கான காலநிலை முன்கூட்டியே எதிர்வு கூறப்படல் வேண்டும். தரமான விதை நெல்லை பெறுவதற்கு தொழில்நுட்பம் இன்னமும் விருத்தியடைய வேண்டும். இதற்கிடையில் தற்போது களைநெல் (Weedy rice) பரவலாக பல இடங்களில் பெருகத் தொடங்கிவிட்டது. இதனால் இக்களையை கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் மல்லுக்கட்ட வேண்டியிருக்கின்றது.

நீரில் அறுவடைசெய்வதை பக்குவமாக கரைக்கு சேர்த்து அதனை முறையாக காயவைக்க காயவைக்கும் களங்கள் பரவலாக அமைக்கப்படல் வேண்டும். பாதைகளை மேலும் அகலித்து நெல் காயவைக்கும் களங்களாக கூட மாற்றிடலாம்.

நெல்லுக்கான உத்தரவாத விலை விரைந்து நிர்ணயஞ்செய்யப்பட்டு விவசாய பெருமக்கள் அறுவடை செய்த நெல்லை ஓரளவு ஆதாயம் வரக்கூடியதாக விற்பதற்கான வழிவகைகள் செய்தாக வேண்டும்.

உலகுக்கு உணவு செய்யும் விவசாயி பசி பட்டினியுடன் வாழ்க்கையை முன்னகர்த்த முடியாமல் திண்டாடினால் அடுத்த போகத்தில் உணவுற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டுவிடும். இதற்கான முன்னுரிமை கொடுக்கப்பட்டு உணவுற்பத்தியில் ஏற்படும் தளம்பலை போக்கி அனைவருக்கும் உணவு கிடைப்பதற்கு வழிசெய்தாக வேண்டும்.

உற்பத்தி செய்த நெல்லை விற்பதற்கான அனைத்து வழி முறைகளும் செய்யப்பட்டு விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். இத்துணை எதிர்பார்ப்பும் தற்போதைய அரசாங்கத்திடம் விரும்பி கேட்கும் விடயங்களாகும். மெல்ல மெல்ல அனைத்து வசதிகளும் கிடைக்க ஆவன செய்யப்படும் என எதிர்பார்க்கலாம்.

காலநிலையை நாமாக மாற்ற முடியாது. இது இயற்கையின் சீற்றமாகவும் சிலவேளைகளில் முடிந்துவிடுகின்றது. என்றாலும் அதனையும் நாம் தவிர்க்கக்கூடிய தகவல் தொழில்நுட்பம் உண்டு. அதனை முறைப்படி பயன்படுத்தி விவசாய செய்கையினை மேம்படுத்த வழிவகைகள் உருவாக்கம் பெறல் வேண்டும்.

இடர்காலத்திற்கேற்ற நெல்லினங்களை பயன்படுத்துதல் முறையாக பசளை பீடைநாசினி பிரயோகம், குறித்த காலத்தில் அறுவடை அதனை தரமானதாக சந்தைபபடுத்தல் மற்றும் மீதமானவற்றை முறையாக களஞ்சியப்படுத்தல் என்பன இவற்றுள் அடக்கம். இளையவர்களை முன்னிறுத்தி அவர்களுக்கான பொறுப்பாக இவற்றை ஏற்படுத்திக் கொள்ளல் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

# பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 696





யானையின் அபயக்குரல் கேட்டுத் திருமால் ஓடி வந்து முதலையைக் கொன்று கஜேந்திரனை மோட்சத்துக்கு அனுப்பினார். அதற்குப் பதிலாக இந்தக் கஜேந்திரன் எத்தனை எத்தனையோ பேரை அந்தத் திருமால் வாசம் செய்யும் மோட்ச உலகத்துக்கு அனுப்பியிருக்கிறது.

நீ இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக வேண்டும் என்று சொன்னாய் அல்லவா? உன் விருப்பத்தை இந்த யானை கண் மூடித்திறக்கும் நேரத்தில் நிறைவேற்றி வைக்கும். அது தன் துதிக்கையினால் உன்னைச் சுற்றி எடுத்து வீசி எறிந்தால் நீ நேரே மோட்ச உலகத்திலேயே போய் விழுவாய்!"

இவ்விதம் கூறிவிட்டு முதன் மந்திரி அநிருத்தர் சிரித்தார். அந்தச் சிரிப்பு வானதிக்கு ரோமாஞ்சனத்தை உண்டாக்கிற்று. இந்த மந்திரி, மனிதர் அல்ல, மனித உருக்கொண்ட அரக்கன் என்று எண்ணினாள்.

"கோமகளே! முடிவாகக் கேட்கிறேன், பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைச் சொல்கிறாயா? அல்லது இந்தக் கஜேந்திரனுடைய துதிக்கை வழியாக மோட்சத்துக்குப் போகிறாயா?" என்ற வார்த்தைகளைக் கேட்டதும், வானதி மீண்டும் மனோதிடம் பெற்றாள்.

"ஐயா! கஜேந்திரனை என்னிடம் வரச் சொல்கிறீர்களா? அல்லது நானே கஜேந்திரனிடம் போகட்டுமா?" என்று கம்பீரமாகக் கேட்டாள்.

அநிருத்தர் கையினால் சமிக்ஞை செய்தார். அத்துடன் அவர் வானதிக்கு விளங்காத பாஷையில் ஏதோ சொன்னார். யானை பூமி அதிரும் படி நடந்து வந்தது. வானதியின் அருகில் வந்தது. தன்னுடைய நீண்ட துதிக்கையினால் வானதியின் மலரினும் மிருதுவான தேகத்தைச் சுற்றி வளைத்தது. அவளைப் பூமியிலிருந்து தூக்கியது.

அந்தச் சில கணநேரத்தில் வானதியின் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் அலை அலையாகப் பாய்ந்து மறைந்தன. தான் அச்சமயம் அவ்வளவு தைரியத்துடன் இருப்பதை நினைத்து அவளுக்கே வியப்பாயிருந்தது.

இளையபிராட்டி குந்தவை தேவி என்னைப் பயங்கொள்ளி என்றும், கோழை என்றும் அடிக்கடி சொல்லுவாரே? அவர் இச் சமயம் இங்கிருந்து என்னுடைய தைரியத்தைப் பார்த்திருந்தால் எத்தனை ஆச்சரியப்படுவார்? அவருக்கு என்றாவது ஒருநாள் இச்சம்பவத்தைப் பற்றித் தெரியாமலிராது பொன்னியின் செல்வருக்காக நான் தீரத்துடன் உயிரை விட்டது பற்றி அறிந்து கொள்வார்.

அதை இளவரசரிடமும் சொல்லியே தீருவார். அப்போது இளவரசர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? அந்த ஓடக்காரப் பெண்ணைக் காட்டிலும் கொடும்பாளூர் வேளார் மகள் தைரியசாலி என்று அப்போதாவது அறிந்து கொள்வார் அல்லவா?

யானையின் துதிக்கை மெல்ல மெல்ல மேலே எழுந்தது. அத்துடன் வானதியும் மேலே ஏறினாள். 'ஆம், ஆம்! அந்தப் பிரம மராட்சதர் கூறியது உண்மை தான்.

இந்தக் கஜேந்திரன் என்னை நேரே மோட்சத்திற்கே அனுப்பிவிடப் போகிறது! அடுத்த கணம் என்னை வீசி எறிய போகிறது! எத்தனை தூரத்தில் போய் விழுவேனோ தெரிய வில்லை ஆனால் விழும் போது எனக்குப் பிரக்ஞை இராது. அதற்குள் உயிர் போய்விடும்!'

வானதி இப்போது யானையின் மதகத்துக்கு மேலேயே போய் விட்டாள். கண்களை மூடிக் கொண்டாள். யானை தன் துதிக்கையைச் சுழற்றியது. வானதியை விசிறி எறிவதற்குச் சித்தமாயிற்று. அந்தச் சமயத்தில் கடவுள் அருளால் வானதி தன் சுய நினைவை இழந்து விட்டாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தானம் அளிப்பது சிறந்தது



(நேற்றைய தொடர்ச்சி...)

அந்தப் பெரியவரும் அரசர் ஆணைக்கு கட்டுப்பட்டு பெரிதும் மகிழ்ந்து மன்னர் முன்வந்து நின்றார். அரசன் அந்தப் பெரியவரை பார்த்து, "ஐயா, பெரியவரே நீங்கள் யார்? உங்களுக்கு இந்த நாட்டு மக்கள் பெரிதும் மரியாதை கொடுக்கிறார்களே என்ன காரணம்?" என்று கேட்டார்.

உடனே அந்தப் பெரியவர் மன்னரைப் பார்த்து, "அரசே, என்னை தெரியவில்லையா? பல ஆண்டுகளுக்கு முன் உங்களிடம் அறிமுகமான விறகு வெட்டி நான். ஏழ்மையில் வாடுவதைக் கண்டு சந்தனக் காட்டை எனக்கு தானமாக வழங்கினீர்கள்.

நான் அந்த மரங்களை வெட்டி நல்ல விலைக்கு விற்று பெரும் பணக்காரன் ஆனேன்" என்றார்.

அரசருக்கு பெரும் மகிழ்ச்சி. பிறகு அவர் அந்த பெரியவரை பார்த்து, "மக்கள் உங்களைப் பெரிதும் மதிப்பதற்கு காரணம் என்ன?" என்று கேட்டார்.

"அரசே, எனக்கு கிடைத்த பெரும் பணத்தில் நான் பல ஏழை எளியவர்கள் பயன் பெற பள்ளிக்கூடம், மருத்துவமனை கட்டி உள்ளேன்.

சிலர் சொந்தத் தொழில் தொடங்க பணம் கொடுத்து உதவியுள்ளேன். அதனால் தான் மக்கள் என் மேல் பேரன்பு செலுத்துகிறார்கள்" என்றார்.

மன்னர் தான் செய்த தியானம் எப்படி எல்லாம் நற்பயன்களை விளைவிக்கிறது என்று எண்ணி மனதிற்குள் மகிழ்ந்தார்.

அந்தப் பெரியவரையும் பாராட்டினார்.

நீதி: தானம் செய்வது சிறந்தது. நாம் ஒருவருக்கு தானம் அளிப்பதால் அதனால் பலரும் பயன் படுகிறார்கள். எனவே, அனைவரும் தானம் செய்யும் நற்பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரிடமும் ஏதேனும் பண்புள்ளது எனும் விழிப்புணர்வே பிறர்மீதான் மரியாதையை வளர்க்கும். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு சந்தர்ப்பம் கொடுத்தால் என்ன?

நாட்டின் 77ஆவது சுதந்திர தினம் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது.

சுதந்திர சதுக்கத்தில் நடந்த சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற்றிருந்தார். தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

இதற்கும் மேலாக ஆடம்பரங்கள், படோபகாரங்கள், ஆரவாரங்கள் எதுவுமின்றி மிகவும் எளிமையாக இந்த நாட்டின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டுள்ளது.

தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதனால் தமிழ் மக்களுக்கு என்ன பயன் என்ற கேள்வி எழுமாயின் அதில் நியாயம் இருக்கவே செய்யும்.

அதேவேளை தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படும்போது பேரினவாதிகள் நிச்சயம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பர்.

இங்குதான் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அந்த எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், இலங்கையின் சுதந்திர தினம் என்பது தனித்து சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல. அது தமிழ் மக்களுக்குமானது.

எனவே தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதி செய்துள்ளார் என்று பொருள் கொள்ள வேண்டும்.

அதாவது சிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்கியதுபோல, கடந்த கால ஆட்சியாளர்களின் இனவாத சிந்தையால், தென்பகுதியில் முற்றி முறுகிப் போயுள்ள இனவாதத்தை வலுக்குறைப்புச் செய்வது கட்டாயமானது.

அந்த வகையில் நாட்டின் சுதந்திர தின நிகழ்வில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றபோது, அது வெறுமனே தமிழ் மொழியாக மட்டுமல்லாமல், தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களும் இந்த நாட்டு மக்கள், எங்களுக்கு இருக்கக்கூடிய சுதந்திரம் அவர்களுக்கும் இருக்க வேண்டும் என்ற மனநிலையை சிங்கள மக்களிடம் நிச்சயம் ஏற்படுத்தும். இஃது மிகவும் அவசியமானதாகும்.

தவிர, இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது புதிய அரசியலமைப்பின் மூலம் எட்டப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறி வருகிறார்.

எனவே அதற்கான சந்தர்ப்பங்களை நாம் வழங்க வேண்டும்.

ஏனெனில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் என்பது பேரினவாதிகளை ஆட்சிப்பீடமேறாமல் தடுத்ததிலிருந்து எழுகை பெறுகிறது.

ஆம், விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து சிங்கள மக்களைக் காப்பாற்றியவர்கள் நாங்கள் என்று மார்தட்டிய மகிந்த ராஜபக்ஷ தரப்பை சிங்கள மக்கள் தூக்கி எறிந்துள்ளனர்.

அதாவது தமிழ் மக்களுக்கு மிகவும் விருப்பமான ஒன்றை சிங்கள மக்கள் செய்துள்ளனர்.

ஆகவே தென்பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை நாங்கள் தக்கமுறையில் பயன்படுத்தி, மிகவும் நுட்பமாக எங்களின் அரசியல் அபிலாசைகளை அடைய வேண்டும்.

இதை நாம் செய்ய வேண்டுமாயின், எங்களிடம் பொறுமையும் நிதானமும் அவசிய மாகிறது.

ஆம், எங்களின் எந்த நடவடிக்கையும் சமாதானத்தை விரும்புகின்ற சிங்கள மக்களுக்கு இடைஞ்சலைக் கொடுத்துவிடக்கூடாது.

இதுவிடயத்தில் நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

# நாட்டின் இன முரண்பாட்டிற்கும் பொருளாதார சிக்கலுக்கும் அரசியலமைப்பே மூல காரணம்

### யாப்பு மாற்றமே உண்மைச் சுதந்திரம் என்கிறார் – பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

(கொழும்பு)

யுத்தத்தின் போர்வையில் நாட்டில் தோன்றியுள்ள சர்வாதிகார வெறி, நாட்டின் ஜனநாயகத்திற்கு ஒரு மரண அடி என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எனவே தற்போதுள்ள சூழல் நிறைந்த அரச கட்டமைப்பை மாற்றி, நாட்டிற்கு உண்மையான சுதந்திரத்தைக் கொண்டு வர, தற்போதைய அரசியலமைப்பை உடனடியாக இரத்துச் செய்து, புதிய அரசியலமைப்பைக் கொண்டு வர வேண்டும் என ஜனாதிபதியிடமும் தற்போதைய அரசாங்கத்திடமும் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்தார்.

77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் நடைபெற்ற தேவ ஆராதனையில் பங்கேற்ற போதே பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு எனப்படும் சர்வாதிகார ஆட்சிக்கு வழி வகுத்த சட்ட கட்டமைப்பிற்குள் தலைவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதீத அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகக் குறிப்பிட்ட கர்தினால், இதன் விளைவாக இனங்களுக்கிடையே எளிதில் தீர்க்கப்படக்கூடிய கருத்து வேறுபாட்டை போராக மாற்றி நாட்டில் ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஆட்சியாளர்கள் 1990களில் இருந்து ஊடக ஒடுக்குமுறை, ஊடகவியலாளர்களைக் காணாமல் ஆக்குதல், வெள்ளை வான் கலாச்சாரம் மற்றும் எதிரிகளை சிறையில் அடைத்தல் போன்ற பயங்கரச் செயல்களைச் செய்தனர்.

பேரழிவு தரும் போரினால் தாயகம் ஆழமான பொருளாதார வீழ்ச்சியில் மூழ்கியதாக சுட்டிக்காட்டிய பேராயர், கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்தப் போக்கு தீவிரமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

# மகிந்த போன்று அநுரவும் செயற்பட்டால் மக்களாணையை இழக்க நேரிடும்

### அநுரவுக்கு பேராசிரியர் தேவசிறி எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்குக் கிடைக்கும் மக்கள் ஆதரவு, வாக்குப்பலம் என்பன தற்காலிகமான ஒன்று என பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

ஆகவே, இந்த நிச்சயமற்றவாக்குப்பலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்கில் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்தது போன்றே, ஜனாதிபதி அநுரகுமாரவும் பிள்ளைகளைத் தூக்கிக் கொஞ்சுதல், பெரியவர்களைக் கட்டியணைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இவ்வாறு செய்வதனால் மட்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது.

இவ்வாறான செயற்பாடுகளினால் தற்காலிகமாக மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆனால் மக்களின் வயிறு மற்றும் அவர்களின் சட்டைப்பை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு திட்டங்கள் வகுக்கப்படாவிட்டால் மக்களின் ஆதரவினைப் பெறுவதில் சவால்கள் ஏற்படும் எனப் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# கரிநாள் போராட்டத்தை மழுங்கடிக்க வவு.வில் அடிக்கு அடி பறந்த சிங்கக்கொடி

(வவுனியா)

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகமெங்கும் இலங்கையின் சுதந்திர தினம் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் வவுனியா மாநகரில் மாத்திரம் இப்போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் அடிக்கு அடி தேசியக் கொடி கட்டப்பட்டிருந்தமையினை அவதானிக்கமுடிந்தது.

வவுனியா ஏ9 வீதியின் இரு பகுதிகளிலும், மணிக்கூட்டுக் கோபுரம், வைத்தியசாலை சுற்றுவட்டம் ஆகிய பகுதிகளில் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தன.

சுதந்திரதினத்தினை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் உட்பட வடக்கு மாகாணத்தின் சில மாவட்டங்களில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டமையுடன்,

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கில் கரிநாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் வவுனியா நகர் முழுவதும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

### இவ்வார இறுதிக்குள்

# நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

நெல்லுக்கான கட்டுப்பாட்டு விலை இந்த வாரத்திற்குள் நிர்ணயிக்கப்படும் என்று விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, நெல்கொள்வனவுக்காக திறைசேரியிடமிருந்து 500 மில்லியன் ரூபாய் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லுக்கான உத்தரவாத விலையை விரைவில் அறிவிக்காவிட்டால் விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், நெல்லுக்கான உத்தரவாத விலை இந்த வாரம் அறிவிக்கப்படும் என வர்த்தக வணிகம் உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்திருந்தார். (ம-7)

### இலங்கை வரலாற்றில் முதல் முறையாக

# குரங்குகளுக்கும் கணக்கெடுப்பு

(கொழும்பு)

குரங்குகள்தென்னைப் பயிர்ச்செய்கைகளை அழிப்பதைத் தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் முதல் முறையாகக் குரங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் எதிர்வரும் 15 ஆம் திகதி அல்லது 22 ஆம் திகதிகளில் குரங்குகள் தொகை கணக்கெடுப்பு நடத்தவுள்ளதாகத் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜயக்கொடி தெரிவித்தார்.

குரங்குகளின் தலையீடு காரணமாக 2024 ஆம் ஆண்டில் மில்லியன் கணக்கான தேங்காய்கள் அழிக்கப்பட்டதாகவும், இது நாட்டின் பொருளாதாரத்தைக் கணிசமாகப் பாதித்ததாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அதனால் குரங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சுனிமல் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழில்கள் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் பொலிஸார் உட்பட பல அரச நிறுவனங்கள் குரங்குகளின் கணக்கெடுப்பிற்காக ஒத்துழைப்பு வழங்கவுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

13

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 602.36 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டு சனத்தொகை கிட்டத்தட்ட 98121 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 55005 ஆகும்.

2018 ஆம் ஆண்டுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சுயேச்சைக் குழு (IND), ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

**வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 10 பல் – 03 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 16 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 30 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 11,296 | 28.99% | 7 | 11 | - | 4 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 7,166 | 18.39% | 5 | 2 | 3 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 5,836 | 14.98% | 4 | 2 | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 5,335 | 13.69% | 4 | 1 | 3 | - |
| சுயேச்சைக் குழு | 2,914 | 7.48% | 2 | - | 2 | - |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | 2,685 | 6.89% | 2 | - | 2 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 2,116 | 5.43% | 1 | - | 1 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,182 | 3.03% | 1 | - | 1 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 245 | 0.63% | - | - | - | - |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 189 | 0.49% | - | - | - | - |
| மொத்தம் | 38,964 | 100% | 26 | 16 | 14 | 4 |

**வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | மருதமடு | 219A, 219, 220Cன் பகுதி, 220Fன் பகுதி, 215ன் பகுதி, 216A, 220Dன் பகுதி | ITAK | 737 |
| 2 | சேமமடு | 220Cன் பகுதி, 220E, 220A, 220B, 220Fன் பகுதி, 220, 220G, 215C, 215ன் பகுதி, 220Dன் பகுதி | TULF | 745 |
| 3 | ஈச்சங்குளம் | 218E, 218B | ITAK | 797 |
| 4 | சாஸ்திரி கூழாங்குளம் | 215ன் பகுதி, 216, 218D | ITAK | 533 |
| 5 | பூவரசன்குளம் | 217A, 217D | ITAK | 533 |
| 6 | சாளம்பைக்குளம் (2 அங்கத்தவர்கள்) | 217C, 217B | UNP | 1197 |
| 7 | பம்பைமடு | 218A | SLFP | 321 |
| 8 | மறக்காரன்பளை | 218C, 214Aன் பகுதி, 218ன் பகுதி | SLFP | 1154 |
| 9 | மகாறம்பைக்குளம் | 214Aன் பகுதி, 215A, 215B, 214Cன் பகுதி | ITAK | 1202 |
| 10 | நெலுக்குளம் (2 அங்கத்தவர்கள்) | 218, 217, 218F, 214Eன் பகுதி | ITAK | 1735 |
| 11 | கந்தபுரம் (2 அங்கத்தவர்கள்) | 214Gன் பகுதி, 218G, 214Fன் பகுதி, 214Dன் பகுதி | ITAK | 1870 |
| 12 | சமளன்குளம் | 244Cன் பகுதி, 244Dன் பகுதி, 244B | ITAK | 1052 |
| 13 | ஆசிக்குளம் | 244 | ITAK | 852 |

## 04 வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபை

வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபையில் மொத்தமாக 20 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப் பிரதேச சபை 9 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் எட்டு தனி உறுப்பினர் வட்டாரங்களும் ஒன்று இரட்டை உறுப்பினர்கள் வட்டாரமும் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 10 ஆகும்.

வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 222.35 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020ஆம் ஆண்டு சனத்தொகை கிட்டத்தட்ட 14582 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 10448 ஆகும்.

. 2018ஆம் ஆண்டுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சுயேச்சைக் குழு 1 (IND1), சுயேச்சைக் குழு 2 (IND2), சுயேச்சைக் குழு 3 (IND3), ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன (SLPP) மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

**வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| | |
|---|---|
| உள்ளூராட்சி சபை | வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபை |
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 08 பல் – 01 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 10 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 18 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 3,916 | 42.67% | 7 | 9 | - | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,178 | 23.73% | 4 | - | 4 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 1,223 | 13.33% | 2 | - | 2 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 923 | 10.06% | 1 | - | 1 | - |
| சுயேச்சைக் குழு 1 | 461 | 5.02% | 1 | 1 | 0 | - |
| சுயேச்சைக் குழு 2 | 368 | 4.01% | 1 | - | 1 | - |
| சுயேச்சைக் குழு 3 | 109 | 1.19% | - | - | - | - |
| மொத்தம் | 9,178 | 100% | 16 | 10 | 8 | 2 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 9,178 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 119 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 9,297 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 10,448 |

**வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | மாமடுவ (இரு அங்கத்தவர்கள்) | C213, C213D | SLPP | 657 |
| 2 | நெடுங்குளம் | C212E, C213B | SLPP | 385 |
| 3 | மஹாகச்சிக்கொடிய | C213A, C213C | SLPP | 560 |
| 4 | மடுக்கந்த | C212, C212F | SLPP | 538 |
| 5 | அவரன்துலாவ | C209A, C209B, C209D, C209E | SLPP | 236 |
| 6 | பெரியஉலுக்குளம் | C209, C209F | IND 1 | 259 |
| 7 | ஈரட்டபெரியகுளம் | C212A, C212C | SLPP | 533 |
| 8 | அலகல்ல | C212B, C212D | SLPP | 346 |
| 9 | மருதம்மடுவ | C209C, C209G | SLPP | 517 |

## 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் வட மாகாணத்தில் மேன்மிகை உறுப்பினர்கள்

யாழ்ப்பாண மாவட்டித்தின் 17 உள்ளூராட்சி சபைகளுள் 6 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் (மேன்மிகை உறுப்பினர்கள்) உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் 3 உள்ளூராட்சி சபைகளுள் 1 உள்ளூராட்சி சபையில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆகும்.

மன்னார் மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளுள் 3 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆகும். வவுனியா மாவட்டத்தின் 5 உள்ளூராட்சி சபைகளுள் 5 உள்ளூராட்சி சபைகளிலும் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆகும். வவுனியா மாவட்டத்தில் மட்டும்தான் சகல உள்ளூராட்சி சபைகளிலும் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 உள்ளூராட்சி சபைகளுள் 2 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் உருவாகியுள்ளன. தொங்கு ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞனின்...

தைச் சேர்ந்த தங்கவேல் விதுசன் (வயது- 28) என்ற வேலையில்லாப் பட்டதாரியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு இரண்டு வருடங்களாக வேலையில்லாமல் இருந்துள்ளார். இதனால் மனவிரக்தி ஏற்பட்டு அவர் வீட்டில் தூக்கில் தொங்கி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## சுதந்திர தினத்...

கப்பட்ட நிலையில், அணிவகுப்புக்கள் அனைத்தும் முடிவுற்ற பின்னர் தமிழ் மொழி மூலமும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கும் முறை நிறுத்தப்பட்டது.

தற்போது மீண்டும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.பல்கலைக்...

தேசியக் கொடி மாணவர்களால் இறக்கப்பட்டு கறுப்புக் கொடியேற்றப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக பிரதான வாயிலின் முன்பாக நேற்றுக் காலை 11 மணியளவில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை பல்கலைக்கழகச் சூழலில் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சுதந்திர தினம்...

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினமான நேற்று வடக்கு, கிழக்கில் பல்வேறு இடங்களில் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வினை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, இனப்படுகொலைக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். போராட்டங்களில் பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் பங்கேற்றிருந்தனர்.

**யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர் போராட்டம்**

முதலில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான கொடிக்கம்பத்தில் பறந்த இலங்கைத் தேசியக் கொடி பல்கலைக்கழக மாணவர்களால் இறக்கப்பட்டு பின்னர் கறுப்புக் கொடியேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களால் பல்கலைக்கழக வளாகத்தின் பல பாகங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்ட நிலையில் பிரதான வாயிலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முற்பகல் 11 மணியளவில் போராட்டத்தினை ஆரம்பித்த மாணவர்கள், இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்து, இலங்கையைக் குற்றவியல் கூண்டில் நிறுத்து, இறுதிப்போரில் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் எங்கே?, ஓலம் நிறைந்த தமிழர் வாழ்வுக்கு எப்போது விடிவு உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியிருந்ததோடு கோசங்களையும் எழுப்பினார்கள். போராட்டத்தின் இறுதியில் "எங்கள் தாய்நிலம் விடிவுறும் நாளே, தமிழர் எமக்கு சுதந்திர நாள்" என்ற தலைப்பிலான பிரகடனத்தையும் வெளியிட்டனர்.

**நல்லூரில் போராட்டம்**

இதேவேளை, நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபிக்கு முன்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் கறுப்புக்கொடி ஏந்திய எதிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட இளையோர் பங்கேற்றிருந்தனர்.

**கிளிநொச்சியில் நீதி கோரிய போராட்டம்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பமாகிய போராட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை சென்றது.

இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின், பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், காணி உரிமைக்கான மக்கள் இயக்கத் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் உட்பட நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின்போது வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும், இலங்கையை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும், ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? உட்பட பல கோசங்களை எழுப்பினர்.

**மட்டக்களப்பு - செங்கலடியில் போராட்டம்**

கிழக்குமாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் மட்டக்களப்பு - செங்கலடிப் பகுதியில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. செங்கலடி சித்தி விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பமான பேரணி கொம்மாதுறை பிள்ளையார் ஆலய முன்றலைச் சென்றடைந்து, அங்கு போராட்டம் தொடர்ந்தது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினர், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பாராளுமன்றக் குழுப் பேச்சாளருமான ஞா.சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்களென பெருமளவானோர் கலந்துகொண்டனர். அவர்கள், "இலங்கையின் சுதந்திர தினம் எங்களுக்கு கரிநாள்", "நீங்கள் சுதந்திரம் அனுபவிக்கும்போது நாங்கள் ஒடுக்கப்படுவதா?", "உங்களுக்கு சுதந்திர நாள் எங்களுக்கு திண்டாட்ட நாள்", "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?", "எமது மேய்ச்சல் தரை எமக்கு வேண்டும்", "நிம்மதியில்லாத நாட்டில் சுதந்திரம் எதற்கு?", "சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு?", "எங்கே எங்கே உறவுகள் எங்கே?" போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,33,100,250,316)

## யாழ்.சிறையிலி...

எஸ்.இந்திரகுமார் தெரிவித்தார்.

77ஆவது சுதந்திர தினமான நேற்று ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2025.02.04 சீட்டிழுப்பு இலக்கம் 5737
Q 3 6 1 2 9 3
அத சம்பத Q 1 2 9 3 சீட்டிழுப்பு இலக்கம் 312
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.04 சீட்டிழுப்பு இலக்கம் - 1767
M 07 10 44 47 M
Double Chance 09893

மெகா பவர்
திகதி 04/02/2025 சீட்டிழுப்பு இலக்கம் 2085
J 08 04 28 43 63

ஜய JAYA
திகதி 2025.02.04 சீட்டிழுப்பு இலக்கம் 005
L 2 4 1 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3979 சீட்டிழுப்பு திகதி 04.02.2025
H 20 40 56 78 H
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.04 சீட்டிழுப்பு இலக்கம் 1046
மீனம் 17 27 45 58 மீனம்
62894 33

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.02.2025 வெற்றி வாரம் 445
ஆங்கில எழுத்து Z மற்றும் வெற்றி இலக்கம் 5 0 5 9 3 5
51146
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,463,276.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2711 சீட்டிழுப்பு திகதி 2025.02.04 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 19 23 42 55 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,100,158.40

சனிதா
திகதி 04.02.2025 வெற்றி வாரம் 4872
02 08 43 64 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,220,662.80
87103

சசிரி
வெற்றி வாரம் 615 சீட்டிழுப்பு திகதி 04.02.2025 செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 32 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4423 சீட்டிழுப்பு திகதி 04.02.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 25 31 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,275,297.60
194392

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 18 35 40 68 69
1887 04.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.564,173,230.00

ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை வெற்றி வாரம் : 2537 சீட்டிழுப்பு திகதி : 2025.02.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,670,932.80
06 23 32 73 R
719754

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## மறக்க முடியாத நாள்

கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் அன்புச் செல்லம்



## ஜோசேப் அனோஜன் (அனோச்)

(கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவன்
DHL Whare House Supervisor)

தோற்றம் 23.07.2003
மறைவு 05.02.2023

இன்றுடன் இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன
இப்படி எல்லாம் நடக்கும் எண்டு நினைச்சு கூட
பார்க்கலடா உன் மறைவை ஏற்றுக் கொள்வது
எங்களுக்குப் பெரிய சோதனை உன் சிரிப்பு
ஒன்றாக இருந்த தருணங்கள் உன் அன்பும் ஆதரவும்
எங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு மூலையிலும்
இருந்து ஒலிக்கிறது நீ எங்கள் வாழ்க்கையில் இருந்தது
ஒரு சுவாரசியமான வரலாறாகவே இருந்துள்ளது
உன்னுடன் இருந்த தருணங்கள் இன்னும் புதியதாகவே
நினைவில் இருக்கின்றன உன் இழப்பு எங்கள்
இதயங்களை வெறுமையாக்கினாலும் உன்
நினைவுகளை சுமந்த படி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

582/56, சென் செபஸ்ரியன் லேன்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

உன் பிரிவால் துயருறும்
அண்ணா சனூஜன்

(735)


# வவுனியா சிறையிலிருந்து இருவர் விடுதலை

(வவுனியா)

நாட்டின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் விடுவிக்கப்பட்டனர்.

77 ஆவது சுதந்திர தினத்தையடுத்து ஜனாதிபதி அவர்களின் பொதுமன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் சிறைக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் செலுத்த வேண்டிய அபராதங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், சிறு குற்றங்களுக்காக கைதாகி தண்டனையின் பாதியை நிறைவு செய்த கைதிகளுமே இவ்வாறு பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையிலிருந்து இரண்டு கைதிகள் விடுவிக்கப்பட்டனர். கைதிகளை விடுவிக்கும் நிகழ்வில் வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் ரங்கன பெரேரா, பிரதான சிறைச்சாலை பிரதானி உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பங்கு பற்றியிருந்தனர். (ம-7,250)


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2195)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2194)
076 825 7716 (ஆகாஸ்)

வேலைக்கு ஆள் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு
வீட்டில் தங்கி நின்று
பணிபுரிவதற்கு 45 வயதுக்கு
மேற்பட்ட பெண் ஒருவர்
தேவை. சம்பளம்
நேரில் கதைக்கப்படும்.
074 179 3394
(C-2196)

வீட்டின் பகுதிகள் விற்பனைக்குண்டு

யாழ். பலாலி வீதி, இலுப்பையடிச்
சந்திக்கு அண்மையில் நல்ல
நிலையிலுள்ள வீடு (வீட்டின்
இடிபாடுகள், பகுதிகள்)
விற்பனைக்குண்டு.
077 162 9385
(3325)

வேலைவாய்ப்பு

No.198, கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS PVT LTD Air Ticketing அலுவலகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் (Sabre System தெரிந்தவர்கள்) விரும்பத்தக்கது அல்லது அனுபவமற்றவர்களுக்கு Training கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
021 222 8555, 077 108 3482
(C-2193)

வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி |
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(812)

வேலைக்கு ஆள் தேவை

உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு வாகன சாரதி (driver) தேவை. வயதெல்லை : 30 - 50
மற்றும் Stock update செய்வதற்கு பெண் பணியாளர் தேவை.
A/L 3 pass, (வயது 20 - 28)
077 945 5167
Happy Supermarket உரும்பிராய்
(813)

LITTLE MASTERS' PRESCHOOL

ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலை - திருநெல்வேலி
14 வருட முன்பள்ளி சேவையினை வழங்குவதற்கு
எமது புதிய கிளையுடன்திருநெல்வேலிப் பிரதேசத்தில் நாம்..

அனுமதிக்கப்படும் வயதெல்லை
3+ வயது மாணவர்கள்
4+ வயது மாணவர்கள்
5+ வயது மாணவர்கள்

★ மிகத் துல்லியமான ஆங்கில உச்சரிப்புடன் எழுத்துப்பயிற்சி
★ தெளிவான தமிழ் உச்சரிப்புடன் எழுத்துப்பயிற்சி
★ சிங்களப் பேச்சுடன் ஆரம்ப எழுத்தறிவு
★ பிள்ளைகளின் தற்காலத்திற்கேற்ப விளையாட்டுக்களுடன் கூடிய செயற்பாடுகள்
★ மதங்களின் அடிப்படையில் காலைப்பிரார்த்தனைச் செயற்பாடுகள்
★ உங்கள் மழலைகளுக்கு நீங்கள் எதிர்பார்த்து நிற்கும் அனைத்துச் செயற்பாடுகளும் எமது முன்பள்ளியில் முன்னெடுக்கப்படுகின்றது.





(3323)

மழலைச் செல்வங்களை வினைத்திறன் மிக்க பிள்ளைகளாக இரு மொழிகளிலும்
மாற்றித் தருகின்றோம் நாம். பிள்ளைகளின் செயற்பாடுகளை
பார்வையிட LMM preschool எனும் Face book முகவரியை நாடுங்கள்.
விரைந்து உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
பிரதான பலாலி வீதி, கந்தர்மடம், திருநெல்வேலி (வசந்தம் பாமசிக்கு அருகில்)

ADMISSION OPEN
Like & share

10th FEBRUARY Monday 8.00 AM
அன்று ஆரம்பமாகவுள்ளது

T.P : 0777474741
T.P : 0761404180

Our Branches:
• K.K.S Road, Jaffna. • K.K.S Road, Inuvil
• K.K.S Road, Mallakam. • K.K.S Road, Tellippalai


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org